திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நிலைமை வந்தபோது, பீகார் மாநிலத்தின் முதலமைச்சர் திரு. தாகூர் அவர்கள், இப்படிப்பட்ட செலவை மத்திய அரசு அல்லது காங்கிரஸ் ஸ்தாபனம் தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார் என்பதை அரசு அறியுமா? வேறு மாநிலத்துக்குப் போகும் ஒரு முதலமைச்சருக்கு ஆகும் செலவு குறித்து மத்திய அரசைக் கேட்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பீகார் முதலமைச்சர் என்ன எழுதியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. நான் அந்தக் கேள்விக்குப் பதிலிலேயே சொன்னேன். மத்திய அரசு அவ்வாறு நினைத்திருக்கலாம். முதலமைச்சர் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்குச் செல்லும்போது, அந்தச் செலவை அந்த அரசு ஒத்துக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் சொல்லி, அதை டெல்லி ஒத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மாநிலத்தில் முதலமைச்சர் சுற்றுப் பயணச் செலவை ஏற்கும்படி செய்ய, எல்லாக்கட்சித் தலைவர்களும் ஒன்றாகச் சேர்ந்தால், அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ராஜாராம்: முதலமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக்கொண்டால், செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதுபற்றி யோசிக்கலாம் என இங்கே சொன்னார்கள். அதுபோல் எல்லாக் கட்சித் தலைவர்களும் சுற்றுப்பயணம் செய்யும்போது, அந்தச் செலவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தச் செலவை அரசாங்கத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

'Hijacking' of Taxis

* 22 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of cases of 'Hijacking' of taxis in Madras City have been reported to the Police; and

(*b*) if so, the steps taken in this regard?

வாடகை மோட்டார் வண்டிகளை கடத்திச் செல்லுதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் வாடகை மோட்டார் வண்டிகள் பல கடத்திச் செல்லப்பட்டது பற்றி காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) வாடகை மோட்டார் வண்டிகள் 1971-ல் நான்கு முறை இடையே கடத்திச் செல்லப்பட்டது என்றும், 1972-ல் (ஆகஸ்டுவரை) எட்டு முறை கடத்திச் செல்லப்பட்டன என்றும் காவலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்னிரவில் டாக்சிகளில் ஏறும் சந்தேகத்திற்குரிய பயணிகளிடம் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், அவசியமாயின், அருகில் உள்ள காவல் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வாடகை மோட்டார் வண்டி வலவர்களுக்குக் காவல்துறைக் கமிஷனர் அறிவுரைகள் கூறியுள்ளார். 24 மணி நேரமும் ரோந்து வரும் காவலர் ரோந்து வண்டிகள் எப்போதும் விழிப்புடன் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : விஞக்கள் 43, 44 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Tiruvalluvar Temple.

* 45 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state with reference to the answer given on the floor of the Legislative Council for Question No. 89 on 8th September 1970—

(a) the present stage of the renovation work of Tiruvalluvar Temple at Mylapore, Madras; and

(b) the probable date on which the work will be completed?

திருவள்ளுவர் கோயில்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 8—9—1970-ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் 89-ம் எண் விஞவிற்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை-மயிலை திருவள்ளுவர் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் வேலை தற்போது எந்த நிலையில் இருக்கிறது ?

(இ) அது எப்போது நிறைவுறும் ?